பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 09 2026 MONDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - பிரான்ஸ் இடையிலான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மேற்கு மண்டல கவுன்சில் கூட்டம், பனாஜியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று நடைபெறுகிறது.

3. நாட்டில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் புத்தொழில் நிறுவனங்களை வலுப்படுத்தும் நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

4. புதுதில்லியில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

5. உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரின் பல பகுதிகளில், கன மழை மற்றும் வெள்ளப் பெருக்கால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

இந்தியாவுக்கும் பிரான்சுக்கும் இடையிலான நல்லுறவு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வலுவடைந்து வருவதாகப் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாரிஸில் சுவாமிநாராயண் இந்து ஆலயத்தைத் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்துப் பேசிய அவர்,இரு நாடுகளும் சிறப்பு உலகளாவிய உத்திசார் ஒத்துழைப்பை உருவாக்கி வருவதாகக் கூறினார்.

தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, பாதுகாப்பு, விண்வெளி உள்ளிட்ட பல துறைகளில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பல ஆண்டுகளுக்கு முன்பே ஸ்ரீ பிரபுபாத சுவாமி பிரான்சுக்குச் சென்று, இஸ்கான் மூலம் இந்தியாவுக்கும் பிரான்சுக்கும் இடையிலான ஆன்மீக உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியதாக அவர் கூறினார். யோகா என்பது இந்தியாவுக்கும் பிரான்சுக்கும் இடையிலான முக்கிய ஊடகமாக மாறியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இப்போது, பிரம்மாண்டமான சுவாமிநாராயண் ஆலயம் மூலம், இந்தியா-பிரான்ஸ் இடையிலான ஆழமான கலாச்சார உறவில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி இருப்பதாக அவர் கூறினார்.

இக்கோவிலின் கலாச்சார, ஆன்மீகச் செயல்பாடுகள் ஐரோப்பா முழுவதும் உள்ள மக்களுக்குப் பயனளிக்கும் என்று திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

மேற்கு மண்டல கவுன்சில் கூட்டம், கோவாவின் பனாஜியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று நடைபெறுகிறது.

கோவா, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களையும், தாத்ரா - நாகர் ஹவேலி, டாமன் - டையூ ஆகிய யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கிய மேற்கு மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் இந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள், யூனியன் பிரதேச நிர்வாகிகள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

மேற்கு மண்டல மாநிலங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, கல்வி, சுகாதாரம், மின்சாரத் துறை சீர்திருத்தங்கள், நகர்ப்புறத் திட்டமிடல், கூட்டுறவு அமைப்பை வலுப்படுத்துதல், இணையக் குற்றத் தடுப்பு உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

அனைத்து உயிரினங்களையும் பாதுகாப்பதற்கு உறுதியுடன் இந்தியா செயல்பட்டு வருவதாக மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

சர்வதேச பாறு கழுகுகள் விழிப்புணர்வு தினம் நேற்று கொண்டாடப்பட்டதையொட்டி, ஹரியானாவின் பஞ்ச்குலாவில் இது தொடர்பான நிகழ்ச்சி நடைபெற்றது.

பாறு கழுகுகளைப் பாதுகாத்தல் என்ற கருப்பொருளில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசிய அமைச்சர் பாறு

கழுகுகளுக்கான பாதுகாப்பு மண்டலங்களைக் கூடுதலாக உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணுகுமுறையானது, ஒரு குறிப்பிட்ட உயிரினத்திற்கு மட்டுமல்லாமல், முழுமையான தன்மையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

விலங்குகளின் இறந்த உடல்களை விரைவாக உண்பதன் மூலம், பாறு கழுகுகள் சூழலியல் சமநிலையைப் பேண உதவுவதாக அவர் தெரிவித்தார்.

1990-ம் ஆண்டு காலகட்டத்துக்குப் பிறகு இந்தியாவில் பாறு கழுகுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகக் கூறிய திரு பூபேந்தர் யாதவ், அவற்றைப் பாதுகாக்க ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை என்று வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

மிதிவண்டி ஓட்டுவதை மக்கள் அன்றாட பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சூரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் மிதிவண்டி ஓட்டும் நிகழ்வில் நேற்று அவர் பங்கேற்றார்.

மிதிவண்டி ஓட்டுவது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் உதவும் என்று திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>

நாட்டில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் புத்தொழில் நிறுவனங்களை வலுப்படுத்தும் நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற புத்தொழில் நிறுவனங்கள் தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், அறிவியல் ஆராய்ச்சிகள் ஆய்வகங்களுக்குள் மட்டும் முடங்கிவிடாமல், தொழில்முனைவு, தொழில்நுட்பப் பரிமாற்றம், வணிகமயமாக்கல், ஆகியவற்றை நோக்கி நகர்வதை உறுதிசெய்வது அவசியம் என்று குறிப்பிட்டார்.

அரசின் முழுமையான அணுகுமுறையானது, ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்வித்துறை, தொழில்துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து வருவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<>>>>>

புதுதில்லியில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. காயம் அடைந்த 11 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களை தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா சந்தித்து உடல்நிலை குறித்து கேட்டறிந்தார். துணைநிலை ஆளுநர் டி.எஸ். சந்து, மேயர் பிரவேஷ் வாஹி ஆகியோர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், மீட்புப் பணிகளைக் கண்காணித்தனர்.

இச்சம்பவத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இந்த விபத்து குறித்து நீதி விசாரணைக்கு தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உத்தரவிட்டுள்ளார். அத்துடன், கட்டட உரிமையாளர் மீது வழக்குப் பதிவு செய்யவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<>>>>>

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தனியார்மயமாக்கப்படவோ அல்லது அதன் முக்கியத்துவம் குறைக்கப்படவோ மாட்டாது என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சில ஊடகங்களில் வெளியான தவறான தகவல்கள் குறித்து இஸ்ரோ விளக்கம் அளித்துள்ளது.

நாட்டின் அடுத்த தலைமுறை விண்வெளித் திட்டங்களில் இஸ்ரோ மேலும் வலுவாகக் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக விண்வெளித் துறையில் தனியார் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுவதாகவும் ஆனால் இஸ்ரோ தனியார் மயமாக்கப்பட மாட்டாது என்றும் அது தெரிவித்துள்ளது.

விண்வெளித் துறை சீர்திருத்தங்கள், பெரிய, வலுவான, உலக அளவில் மேம்பட்ட விண்வெளிச் சூழல் அமைப்பை உருவாக்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மத்தியப் பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ளார்.

டாக்டர் மோகன் யாதவ், அரபு நாடாளுமன்றத்தின் தலைவர் முகமது அகமது அல் யம்மாஹியைச் சந்தித்துப் பேசினார்.

மத்தியப் பிரதேசத்தின் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்புத் திட்டம் சிறப்புக் கண்காட்சியையும் அவர் தொடங்கி வைத்தார். துபாயில் இன்று தொடங்கவுள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் திரு மோகன் யாதவ் பங்கேற்கவுள்ளார்.

<<<<<>>>>>

ஹரியானாவில் வேளாண் மேம்பாட்டுக்கும் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் மாநில அரசு முக்கியத்தும் அளித்து வருவதாக அந்த மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி கூறியுள்ளார்.

சண்டிகரில் 78 கோடி ரூபாய் மதிப்பிலான ஏழு வேளாண் திட்டங்களுக்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

அதிகபட்சமாக 24 வகையான பயிர்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும் முதல் மாநிலமாக ஹரியானா உள்ளது என்று திரு நயாப் சிங் சைனி தெரிவித்தார்.

<<<<<>>>>>

திரிபுராவில் பிஜேபி ஆட்சி அமைந்த பின்னர் மாநிலத்தில் வளர்ச்சி அதிகரித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு மாணிக் சஹா கூறியுள்ளார்.

அகர்தலாவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆட்சி செய்த 35 ஆண்டுகளில் மாநிலம் பின் தங்கிய நிலைக்குச் சென்றதாகத் தெரிவித்தார்.

<<<<<>>>>>

உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரின் பல பகுதிகளில், கன மழை மற்றும் வெள்ளப் பெருக்கால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு நீடிப்பதால் 24 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கனமழை தொடர்பான சம்பவங்களில் கான்பூரில் நான்கு பேரும், படாயூனில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். ஷாஜஹான்பூர் மாவட்டத்தில் கங்கை மற்றும் ராம்கங்கா ஆறுகளின் நீர்மட்டம் அபாய அளவைத் தாண்டியுள்ளது.

சித்திரக்கூட் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், ராம் காட் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார். மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இதற்கிடையில், மாநிலத்தின் கிழக்குப் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கும், மேற்கு மாவட்டங்களில் இன்று வரையும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகார் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கங்கை, கண்டக், கோசி உள்ளிட்ட பல முக்கிய ஆறுகளில் தண்ணீர் அபாய அளவைத் தாண்டியுள்ளது.

இந்நிலையில் மத்தியப் பிரதேசம், உத்தராகண்ட், மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் சில இடங்களில் இன்று கனமழை பெய்யுக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>